# சுடர்

17 ஜூன் ஜூலை 198

மாத இதழ் — 35 காசு




FREE E-BOOKS - www.thamizham.net / TM1868 / Dec 2010

FREE E BOOKS - www.thamizham.net / TM1868 / Dec 2010



ஒரு கழுதை, ஒரு குதிரை, ஒரு பெண் நமது நாட்டின் இந்த மூன்று சுமை தூக்கிகளும், ஒரு பாவமும் அறியாமல் பாரம் சுமந்தபடி ஐதராபாத் வீதியில் போய்க் கொண்டிருந்தார்கள்.

பலவீனமாக தொங்கிக் கொண்டிருந்த உச்ச சக்தி மின்சார கம்பிகள், திடீரென வீசிய மழைக் காற்றில் கழன்று வீழ்ந்து இந்த வாயில்லா ஜீவன்களை பலி கொண்டு விட்டன.

நாளுக்கு நாள் நமது அரசாங்க நிறுவனங்களில் நிறைந்து வரும் அசமந்தத்தையும், அசட்டையையும் பார்க்கும் போது, ரயிலிலோ, பஸ்ஸிலோ போகமட்டுமல்ல, தெருவில் சும்மா நடந்து போகவே பயமாக இருக்கிறது.

# சுட்டுவோர்

**...மெல்லாம் ஒரே சாதி - மனித சாதி என்று சொல்லக் கூடிய காலம் எப்போது வரும்?**

—க. தியாகராசன், நெய்வேலி


...ம் தலைமுறையில் உன்னூர் சாதி ...ளாவது ஒழிகிறதா பார்ப்போம்.

# பதில்

**...டைப்புகளைச் செயலாக்காம ...டைப்பாளியைத் துதிபாடும் நிலை ...ப்போதுதான் மாறும்?**

—இர. விஜய், திருப்பூர்.

...ப்படிச் செய்வதை விட படைப்-...ளிக்குப் பெரிய துரோகசில்லை-...டைப்பாளியின் உண்மை வழித் ...தான்றல்கள் விறுகொண்டு எழும் ...பாது படைப்பாளியைத் துதிபாடி ...தாயம் தேடியவர்கள் முகத்திரை ...ழியும்.



**விழிப்பு விதையை எத்திசை வழியில் விதைக்க விரும்புகிறீர்கள்?**

தி. அ. சந்திரசேகரன், செஞ்சி

எத்திசை வழியிலும்...

**சினிமா நடிகையரின் கீழ்த்தரமான நிலை ருசிகரமாகப் போனதேன்?**

—வே. முத்தையன், அகிலாண்ட கெங்காபுரம்.

யாருக்கு ருசிகரமாய் போனது? நமக்கில்லையே சில பத்திரிகைக்-காரப் பிணம்தின்னிக் கழுகுகளுக்கு இவை ருசிக்கக்கூடும். அசிங்கமே இவற்றின் ஆகாரமாகிறது!

**ஜாதி மத அடிப்படையிலான மாநாடுகள் அதிகம் நடைபெறு-கின்றனவே.**

—N.T.C. பன்னீர்செல்வம், மன்னார்குடி.

இவை தமது காலக்கட்டத்தின் கடைசியில் வாழ்வதால், மாநாடு கள் போட்டு போகும் உயிரை இழுத்துப் பிடிக்க முயல்கிறார்கள், இவற்றால் வாழ்பவர்கள்.



**பேய் எங்கே வாழும்?**

—ஜெயின் சேகர், ஜெயின்நகர்.

நிச்சயம் புளியமரத்தில் இல்லை; எளியவர்களை மேலும் எளியவர்-களாக வைத்திருப்போர் மனதில் ஒரு சமயம் வாழுமோ?

# இன்னும் இப்படி நடக்கிறதே!

25—4—82 அன்று வாசு என்பவரை விசாரணைக்குக் கூட்டிச் சென்று அடித்திருக்கிறார்கள் ஆயிரம் விளக்குப் பகுதி காவல் நிலையத்தினர். அவர் முன்பற்கள் இரண்டு உடைந்தன. காலில் எலும்பு விரிசல் கண்டது. வாசுவின் தம்பி வழக்கறிஞர்களிடம் முறையிட்டபோது இருவர் உதவிக்கு வந்தனர். வாசுவை 26—5—82 அன்று எழும்பூர் நீதி மன்றத்தில் ஆஜர் படுத்தி, அவரது கால் கட்டைக் காட்டி, ஜாமீன் மனு-வை வழக்கறிஞர் தாக்கல் செய்தார். அதனை 28—5—82 அன்று எடுத்துக் கொள்வதாகச் சொல்லி வாசுவை நீதி மன்றம் சிறைக்கு அனுப்பியது.

அன்று காலையே வாசுவின் காயங்களுக்குத் தமிழக அரசு நஷ்ட ஈடு தர உத்தரவிடும்படி உயர் நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதனை 30-4-82 அன்று விசாரிப்பதாக நோட்டிஸ் வந்தது.

28-4-82 அன்று வாசுவிற்கு மாஜிஸ்ட்ரேட் ஜாமீன் உத்திரவிட்ட போதிலும், வாசு இருமுறை கொண்டுவந்த ஜாமீன்தாரர்களை ஏற்க மறுத்துவிட்டார் மாஜிஸ்ட்ரேட்.

30-4-82 அன்று உயர்நீதிமன்றத்தில் அரசு தரப்பு வழக்கறிஞர் வாசு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்-ளார் என்ற தகவலைச் சொன்னார். வாசுவின் வழக்கறிஞர், வாசு பற்கள் உடைக்கப்பட்டு, காலில் பலத்த அடியுடன் இருப்பதை விசாரணை செய்தால் தான், இது போல மற்றவர்கள் மீது, சிறப்பாக ஏழை அரிசனங்கள் மீது அத்து மீறல்கள் நடப்பதை தடுக்க முடியும் என வாதிட்டார். எனினும், நீதிமன்றம் ரிட்மனுவை தள்ளுபடி செய்து விட்டது.

இந்நிகழ்வுகளைக் கோர்வையாக எழுதி, ஏழை அரிசனங்களுக்குப் பாதுகாப்பு கிடைக்க நீதி முறையில் வாய்ப்பில்லையா? என்பதைச் சோதிக்கும்படி தலைமை நீதிமன்றத்திற்கு வாசுவின் வழக்கறிஞர் கடிதம் ஒன்றை 3-5-82 அன்று அனுப்பிவைத்தார். தலைமை நீதி மன்றம் இக்கடிதத்தையே ரிட்மனுவாக பாவித்து வாசுவைச் சொந்த ஜாமீனில் விடும்படி உத்தரவிட்டுள்ளது. கடிதத்தில் எழுப்பப்பட்டுள்ள பிரச்சனைகளுக்குத் தமிழக அரசையும், போலீஸ் அதிகாரியையும், எழும்பூர் நீதிமன்றத்தையும் பதில் கொடுக்கும்படி கேட்டுள்ளது.

வாசுவை ஜாமீனில் விட்டபின்பு, மீண்டும் புகார் இருப்பதாகக் கூறி அவரது மாமியாரை கைது செய்தனர். சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார் அவர். அங்கு அவர்மேல் சிறைக்கதவு விழுந்து, அடிப்பட்டு இறந்ததாக, அவர் பிணத்தையே விடுதலை செய்தார்கள்;

←

வாசுவின் உறவினர்கள் தமிழக முதல்வரிடம் விசாரணை கோரி மனு கொடுத்துள்ளனர்.

தமிழகத்து தலைநகரிலேயே இப்படி நடந்துள்ளது! இக்கொடுமையை விசாரிக்க இந்திய தலைமை நீதிமன்றம் நீதிவிசாரணைக்கு ஏற்பாடு செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது! நிஜங்கள் வெளிச்சத்திற்கு வருவதுடன், அராஜக வாதிகள் தண்டிக்கப்படுவார்களா?

—இரத்தினம்

FREE E BOOKS - www.thamizham.net / TM1868 / Dec 2010



# சாராயக் கார்

இங்கு மனிதனை ஆட்டிப்படைத்து அழிவுதரும் மதுவை, பிரேசில் நாட்டு கார்களில் ஊற்றி இன்ஜினை ஆடவைத்திருக்கிறார்கள்; ஆக்கப்பொருளாக்கியிருக்கிறார்கள், பிரேசிலில் ஓடும் 25% கார்களுக்கு சாராயம் எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.

மூளையைச் செலவழித்து, அது மக்களுக்குப் பயன்படும்படி உதவ நேர்மையான நல்லெண்ணம் இருந்தால் எந்தப்பிரச்சனையையும் தீர்த்து விட முடியும்.

பெட்ரோல் பஞ்சத்தால் உலக நாடுகள் திண்டாடி வரும் இவ்வேளையில் பிரேசில் வெற்றிகரமான மாற்றை உருவாக்கி விட்டது. கார்களுக்குப் பயன்படுத்தப்படும் சாராயம் அதிக அளவில் இருந்தாலும் அது பெட்ரோலைப் போல எளிதில் வீணாவதில்லை. பெட்ரோலின் விலையைக் காட்டிலும் சாராயத்தின் விலை மிகவும் குறைவே. மேலும் சுற்றுப் புறத்தைப் புகை மண்டலத்தால் நஞ்சாக்கும் கொடுமை சாராயத்தில் இல்லை. சாராயம் பயன்படுத்தப்படும் கார்களின் இயந்திரங்கள் சுத்தமாகவும், பழுதில்லாமலும் இயங்கி வருகின்றனவாம்.

பிரேசில் கடந்த ஐந்து ஆண்டுகளாகவே சாராயத்தைப் படிபடியாக வாகன எரிபொருளாகப் பயன்படுத்தும் தொழில் நுட்பத்தை வளர்த்து வந்துள்ளது. தான் பெற்ற பயனை மற்ற நாடுகளுக்கும் விளக்கியும் வருகிறது. எண்ணெய் வளநாடுகள் கூட இதை கற்பதில் ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிகிறது.

நமது சென்னை ஐ. ஐ. டிஐச் சேர்ந்த விஞ்ஞான மாணவர்கள் சில மாதங்களுக்கு முன் சாராயத்தில் ஓடும் கார்களின் மாதிரியைச் செய்து ஓட்டியும் காண்பித்தனர். இந்த தொழில் நுட்பத்தை 'லபக்' கென்று பிடித்து நடைமுறைப் படுத்தியிருந்தால் எத்தனையோ விலை உயர்வுகளை மக்களுக்குத் தவிர்த்திருக்கலாம். பஸ்கள், லாரிகள், சாராயத்தில் ஓடினால், போக்குவரத்து செலவு எவ்வளவோ குறைந்து இருக்கும்!

முற்போக்கு விஷயங்கள் என்றாலே நம் அரசுக்கு வேம்பாகி விடுகிறது. சாராயக்கடை, சாராயஅரசியல், இதில் ஆர்வம் காட்டும் கட்சிக்காரர்களுக்கு சாராயக்காரில் எல்லாம் ஆக்கப் பூர்வமாக நாட்டம் வந்து விடும் என்று எதிர்ப்பார்ப்பது தப்பு தான்!

—எழில்

# விபச்சாரிகள் சங்கம்

மத்திய பிரதேசத்தின் உஜ்ஜைனி நகரத்து விபச்சாரிகள் இந்தியாவிலேயே முதல் முறையாக பதிவு செய்யப்பட்ட சங்கம் அமைத்திருக்கிறார்கள். இதில் 80% பேர் கை நாட்டு பேர்வழிகளானாலும் வாக்கெடுப்பு நடத்தியே தங்கள் சங்கத்தின் செயல் திட்டத்தை வகுக்கிறார்கள்.

தங்களது சந்ததியினரை இப்படுகுழியிலிருந்து மீட்க இச்சங்கம் "சஞ்சய் காந்தி நினைவு பள்ளி" என்ற பெயரில் சிவப்பு விளக்கு வட்டாரத்திலேயே 90 பிள்ளைகளுக்காக ஒரு கல்விக் கூடம் அமைத்திருக்கிறது.

"சஞ்சய் காந்தியின் பெயரை இப்பள்ளிக்கு வைக்க அனுமதிக்க மாட்டோம்" என்று சஞ்சய் நினைவு டிரஸ்ட் செயலாளரும், எம்.பி. யுமான அருண் நேரு கண்டனக் கடிதம் விட்டு எச்சரித்திருக்கிறார்.

"கௌரவமான எங்கள் குழந்தைகளை நல்ல குடிமக்களாக்க விரும்புகிறோம். எங்களைப் போல இவர்கள் இத்தொழிலுக்கு திரும்ப மாட்டார்கள். மறைந்த சஞ்சய் காந்தியின் பெயரை வைக்க இந்நாட்டு குடிமக்களான எங்களுக்கு மட்டும் உரிமையில்லையா? பெயரை மாற்ற மாட்டோம். தேவையெனில் வழக்கு மன்றத்தில் சந்திக்கவும் தயார்" என்று கூறுகிறார் சங்கத் தலைவி சகுந்தலா தேவி.

தங்களது வாழ்வை நேர்மையாக சீர்திருத்தும் எண்ணத்துடன் பிரதமர் இந்திராவுக்கு, "குறைந்தது 10 விபச்சாரிகளேனும் டில்லி ராஜ் காட்டில், இனி இத்தொழிலை முழுவதும் விட்டுவிடுவதாக சபதம் ஏற்க சித்தமாய் இருக்கிறார்கள்" என்று எழுதியதற்கு பதிலில்லை.

தங்கள் வாழ்வை முழுவதும் புனர் அமைத்து ஒரு தனி குடியிருப்பை நகருக்கு வெளியே அமைக்க அதிகாரிகளையும் அமைச்சர்களையும் போய் பார்த்தார்கள். "டன் கணக்கில் வாக்குறுதிகள் தந்தார்கள் ஆனால் ஒரு அவுன்ஸ் கூட உதவி கிடைப்பதில்லை" என்கிறார் செயலாளர் பாபுபாய்.



நகராட்சி அலுவலர்கள் விபச்சாரிகளுக்கு ஏப்ரல் முதல் லைசென்ஸ் வழங்கும் முறையை செயல்படுத்தினார்களேயொழிய, தங்கள் வாழ்வை சீர்திருத்திக்கொள்ளும் வசதிகளைத் தரவில்லை.

இவர்களால் லாபமடையும் சுயநலமிக்க சிறு கும்பல் ஒன்று, இவர்கள் சீர்திருந்துவதை குலைத்து வருவதாக விபச்சாரிகள் கவலைப்படுகிறார்கள்.

—ஸ்டெனிஸ்லாஸ்

FREE E BOOKS - www.thamizham.net / TM1868 / Dec 2010

அட்டைப் படக் கட்டுரை

# விடுதலைப் புலிகள்

இலங்கையின் விடுதலைப் புலிகளைப் பற்றி பல்வேறு செய்தித் தாள்கள் கடந்த 6 மாதமாக செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

“தமிழ் ஈழ விடுதலைப் புலிகள்” என்று பல்வேறு அமைப்புகள் தங்களை அழைத்துக் கொள்கிறார்கள். ரகசியமாகப், பயங்கரக் குழுக்களாக வேலை செய்யும் இவர்கள் வங்கிகளைக் கொள்ளையடித்து பணம் சேர்த்திருக்கிறார்கள். தங்களை எதிர்ப்போரை தயை தாட்சண்யமின்றி கொலை செய்து விடுகிறார்கள். இருப்பினும் இவர்களை விடுதலை செய்ய வேண்டும், இலங்கை அரசிடம் இவர்களை ஒப்படைக்கக் கூடாது என்று தமிழ் நாட்டுத் தலைவர்கள் அனைவரும் கோரிக்கை விடுக்கிறார்கள். சட்டத்துக்குப் புறம்பான முறையில், பயங்கர நடவடிக்கைகளில் ஈடுபடும் இவர்களை, சட்டபூர்வமான அரசியலில் ஈடுபடும் தமிழ் நாட்டு அரசியல் தலைவர்கள் ஆதரிப்பதேன்?

இலங்கையில் சிங்கள மொழி பேசுவோர், தமிழரைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகம். இலங்கை ஆதிவாசிகளைத் தவிர, சிங்களவரும் தமிழரும் இந்தியாவில் இருந்து குடியேறியவர்கள் தான். (இலங்கை மண்ணுக்கு சிங்களவர் எந்த அளவு சொந்தம் கொண்டாட முடியுமோ அந்த அளவு தமிழருக்கும் இலங்கை மண்ணில் சொந்தம் உண்டு.) பூர்வீகத் தமிழர்கள் இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர்.

50 ஆண்டுகளுக்கு முன், வெள்ளை அரசாங்கத்தால், வெள்ளை முதலாளிகளுக்கு நன்மை செய்ய குடியேற்றப்பட்ட தமிழ் வழித் தோன்றல்கள், இன்றும் இலங்கை மலையகங்களில், தோட்டத் தொழிலாளிகளாகப் பணிபுரிகின்றனர்.

இலங்கையில் வாழும் பூர்வீகத் தமிழர்களில் பெரும்பான்மையினர் விவசாயத் தொழிலாளிகளே. இருப்பினும் 1960 வரை இலங்கை அரசு அலுவலகங்களில் சிங்களவரை விட அதிகமாகப் பணி புரிந்தவர்கள் தமிழர்கள் தான்.

1949-ல் இந்தியா பாகிஸ்தான் பிரஜா உரிமைகள் சட்டம், 1964ல் ஸ்ரீ மாவோ-சாஸ்திரி ஒப்பந்தம், 1972-ல் சிங்களகலாச்சார விரிவுத் திட்டம் ஆகியவை அனைத்தும் தமிழர்க்குப் பாதகமாகவும், சிங்களவர்க்கு நன்மை பயப்பதாகவும் அமைந்தன. 1960-70 களில் சில குழுக்கள் ‘செகுவேரா இயக்கம்’ என்ற பெயரில் செயல்பட்டன. இதே சிங்கள அரசு தான், 10,000 சிங்கள மாணவர்களைக் கைது செய்து, கொலைசெய்தது. பின்னர் மக்களைத் திசை திருப்ப சிங்கள கலாச்சார விரிவுத் திட்டம் கொண்டு வந்தது.

□ ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதி சுட்டி வெளிவரும்.
□ 12 இதழ்கள் அஞ்சலில் பெற ஆண்டு சந்தா ரூ. 4.00
□ ஆயுள் சந்தா: ரூ 150 (ரூ 25 வீதம் 6 தவணைகளிலும் கட்டலாம்)
□ எல்லாத் தொடர்புகளுக்கும்:—
ஆசிரியர்குழு, ‘சுட்டி’ K-105, அண்ணாநகர், சென்னை-600 102

சுட்டி பழைய இதழ்கள் தற்போது 5 முதல் 16 வரை மட்டுமே உள்ளன. பெற விரும்புவோர் இதழுக்கு 25 காசு வீதம் அஞ்சல்தலைகள் அல்லது பணவிடை (M.O.) அனுப்பினால் எங்கள் செலவில் உங்களுக்கு அனுப்புகிறோம்.

அதன்படி, அதிகமான கல்வி வாய்ப்பு, வேலை வாய்ப்பு ஆகியவை சிங்களவர்க்குத் தரப்பட்டன. இந்தத் திட்டங்களால் முதன் முதல் தாக்கப்பட்டது பூர்வீகத் தமிழர்களின் மேட்டுக்குடி மாணவர்கள் தான். அவர்கள் தான் முதன் முதலில், அதாவது 1972-ல் “சுதந்திர யாழ் தேசம்” என்று அறிவித்து போராடத் துவங்கினர். பின்னர், இலங்கையில் உள்ள அனைத்து தமிழர்களையும் ஒன்றிணைக்காமல் போராட்டத்தில் வெற்றி பெற முடியாது என்று உணர்ந்து ‘தமிழ் ஈழ விடுதலை’ என்ற கொள்கையை பிரகடனம் செய்தனர்.

விடுதலைப் புலிகள் என்றழைக்கப்படும் இந்த ரகசிய, பயங்கரவாதக் குழுக்கள், தமிழ் தலைவர்கள் என்று நமக்கு அறிமுகம் ஆகியிருக்கும் அமிர்தலிங்கம், தொண்டைமான் ஆகியோரிடம் தொடர்பு வைத்துள்ளனர்.

தமிழகத்து அரசியல் தலைவர்கள் இலங்கை அரசியலை மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறார்கள். தமிழ் ஈழ விடுதலை புலிகளோ பிரச்சனையை உணர்ச்சி மயமாக அணுகுகின்றார்கள்.

பயங்கரவாதம் உண்மையிலேயே பயங்கரமானது; ஒரு நாட்டை தட்டி எழுப்ப பயங்கர வாதத்தால் முடியாது, அழிவுதான் அது இட்டுச் செல்லும் இலக்காகும். இதையெல்லாம், விடுதலைப் புலிகள் உணர்ந்து கொள்வதற்கு இப்போது நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கைதாகியிருக்கும் விடுதலைப் புலிகளை இந்திய அரசு, இலங்கை அரசிடம் ஒப்படைக்கும் என்று நாம் நம்பவில்லை. காரணம், அத்தகைய சட்டமோ, ஒப்பந்தமோ நம்முடைய அரசு ஏற்படுத்திக்கொள்ளவில்லை. அண்மையில் அமைச்சர் அரங்கநாயகத்தை பெங்களூரில் மாணவர்கள் சரியாகத்தான் கேட்டார்கள்:— தப்பி ஓடிவந்த தலாய் லாமா, அடைக்கலம் தேடிய முக்திவாகினி, ஈரான் கோமினி எதிர்ப்பாளர்கள் ஆகியோருக்கு மட்டும் தஞ்சம் தரலாம்; தமிழ் ஈழ விடுதலைப் →

FREE E BOOKS - www.thamizham.net / TM1868 / Dec 2010

புலிகளை மட்டும் காட்டிக் கொடுப்பதா? என்று கேட்டார்கள்.

வெள்ளையர் அரசை எதிர்த்த பாரதிக்கும், அரவிந்தருக்கும் புதுச்சேரியில் அடைக்கலம் கொடுத்த பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை விட. நமது பாரதம் குறைந்ததா என்ன?

—கி. சு

## 'சுட்டி' இலவசமாக அனுப்புங்கள்!

'சுட்டி'யைப் பற்றித் தெரியாத நண்பர்கள் உங்களுக்கு இருக்கிறார்களா?

அவர்களுக்குச் 'சுட்டி'யை அறிமுகப்படுத்த விரும்புகிறீர்களா? சுட்டியை நிச்சயம் வரவேற்கக் கூடியவரா?

அப்படியானால் அவர் முகவரியை ஓர் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பவும். எங்கள் செலவில் இலவசமாக ஒரு மாதிரி இதழ் அனுப்புகிறோம். அஞ்சலட்டையின் மேல் மாதிரி இதழ் எனக் குறிப்பிடவும்.

ஒருவர் எவ்வளவு நண்பர்களின் முகவரி வேண்டுமானாலும் அனுப்பலாம்.


போஸ்டர் அச்செழுத்துக்கள்
சிறப்பான தரத்தில்
மலிவான விலையில்—பெற

**ரங்கா டைப் பௌண்ட்ரி**

பிற தயாரிப்புகள் :

- எல்லாவித அச்செழுத்துக்கள்.
- அச்சக உபகரணங்கள்

தொலைபேசி : 37999

அலுவலகம் :
73, ஹண்டர்ஸ் சாலை
வேப்பேரி,
சென்னை-600 112.

தொழிற்சாலை :
38, குட்டி செட்டி தெரு,
பெருமாள்பேட்டை,
சென்னை-600 007.


உண்மையைத்தான்
சொல்லுறாங்க
ஓட்டுக்காக வரும் பொழுது
சொன்னதைத்தான் செய்யறாங்க
ஓட்டு வாங்கிப் போனதும்
ஏற்றத்தாழ்வை போக்கிட்டாங்க,
இருட்டை வெளிச்சம்
ஆக்கிட்டாங்க,

வீடு, மனை, காராச்சு,
வேலையில்லாத் திண்டாட்டம்
தீர்ந்தாச்சு
விலைவாசி கொறஞ்சாச்சு

வேளைக்கு வேளை
வித விதமா சுகமாச்சு
என்னத்த யோசிக்கிறீங்க?
இத்தனையும் எங்களுக்கல்ல—எங்க
ஓட்டை வாங்கிப்போனவங்களுக்கு

—இரா நமச்சிவாயம்





நாங்கள் உருவாக்கிய
கட்சித் தலைவர்களுக்கு
எடைக்கு எடை
தங்கம்!
வெள்ளி!
நாணயம்! அதற்கு மேல்
அறுசுவை விருந்து!
எங்களுக்கோ
கஞ்சிக்குப் படி
அரிசி கூட இல்லை!

—மணி

FREE E BOOKS - www.thamizham.net / TM1868 / Dec 2010

# நமது மாம்பழ மருத்துவம்

☐ தொடர்ந்து மாங்காய் சாப்பிடுபவர்களுக்கு அபாயமான பெருங்குடல் புற்றுநோய் வருவதில்லை என்று மேல்நாட்டு விஞ்ஞான பரிசோதனைகள் நிரூபித்துள்ளன.

☐ மாம்பழச்சாறு தீராத தலைவலியைப் போக்கும் குணமுடையது.

☐ மாம்பழத்தில் நிறைய வைட்டமின் 'ஏ'யும், பி, சி, டி முதலிய வைட்டமின்களும் கலந்துள்ளன. எனவே தோலின் வரம்பற்ற வளர்ச்சி மாலைகண் நோய், கண்கட்டி, நரம்புத்தளர்ச்சி, அஜீரணக் கோளாறு 'டிப்தீரியா' என்ற தொண்டை அடைப்பு நோய் இவற்றிற்கு மா சிறந்த மருந்தாகும்.

☐ எவ்வளவு நாட்பட்ட ஆஸ்துமாவாக இருந்தாலும் மாங்கொட்டை பருப்பு குணப்படுத்தும். பருப்பை உலர்த்தித்தூளாக்கி, தூளுடன் தேன் சேர்த்து பிசைந்து நெல்லிக்காய் அளவு காலை, மாலை உண்டால் பலன் நிச்சயம். இதுவே மூலநோய், வயிற்றுக்கடுப்பு, பேதி, கொக்கிப்புழு இவற்றையும் நீக்கும்.

☐ சிறு நீரகத்தில் ஏற்படும் எல்லா தொல்லைகளையும் மாம்பருப்பு குணப்படுத்தும்.

☐ நீரழிவு நோய்க்கு மாந்தளிர் உதவும். இளந்தளிர்களை நிழலில் உலர்த்துக. பிறகு வெயிலில் நன்கு உலர்த்துக. உலர்ந்ததும் நைய இடித்து ஒரு புட்டியில் பத்திரப்படுத்துக. ஒரு டம்பளர் கொதிக்கும் நீரில் ஒரு தேக்கரண்டி மாவிலைத்தூளைக் கலக்கி சூட்டோடு குடிக்கவும். ஒரு நாளைக்கு 2 வேளை வீதம் 40 நாட்கள் தொடர்ந்தால் கடுமையான நீரழிவு நோயும் குணமாகும்.

☐ தொண்டைக்கம்மல், தொண்டைரணம், இருமல் போன்ற எந்த தொண்டை நோயையும் மாவிலை போக்கும். முற்றிய 4 இலைகளைச் சட்டியில் போட்டு, அதில் 1 தேக்கரண்டி தேன்விட்டு அடுப்பிலேற்றி இலை கருகும் வரை வறுக்கவும். பின் 200 மில்லி நீர் விட்டு சுண்டும் வரை காய்ச்சவும் இதனை ஓர் அவுன்சு வீதம் 2 வேளை சாப்பிட்டால் எந்தத்தொண்டை தொல்லையும் நீங்கும்.

☐ இரத்த மூலத்திற்கு கையளவு மாவிலை இடித்து சாறு பிழிந்து, ½ அவுன்சு சாறுடன் ½ அவுன்சு தேன், ½ அவுன்சு நெய்கலந்து—3 வேளை உண்க. குணம் நன்கு தெரியும். இதனை சேகரிக்காது அன்றாடம் தயாரிக்க வேண்டும்.

முக்கனிகளில் ஒன்றாக மாவை வைத்திருப்பதற்கு அதன் சுவை மட்டுமல்ல மருத்துவ குணமும் காரணமாகும்.

—சித்தன்

# காலம் பொன்னானது

'காலம் பொன்னானது' என்று கால தாமதத்திற்கு இலக்கணம் வகுக்கும் நமது போக்குவரத்து சாதனங்களில் எழுதியிருப்பது வேடிக்கையானது! எங்கும், எதிலும் கால உணர்வின்றி செயல்படுவது நமது தேசிய குணமாகி விட்டது.

இந்தியா முன்னேறாமைக்கு வறுமையும், சுரண்டலும் மட்டுமன்றி எல்லாவற்றிலும் கால உணர்வின்றி செயல்படும் இந்த தேசிய கலாச்சாரம் கூட காரணமே!

இன்னும் சொல்லப் போனால் நேரம் தவறுவது ஒரு பெரிய மனிதத்தனமாகவும், கௌரவமாகவும் நினைக்கப்படுகிறது. நம் மக்களின் எடுத்துக் காட்டாக இருக்க வேண்டிய முதலமைச்சர்கள், அரசியல் பிரமுகர்கள்-தாங்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் தாமதமாக வருவதையே ஒரு மரபாகப்பின் பற்றுகிறார்கள். பொதுமக்களின் பொன்னான நேரத்தை மண்ணாக்க இவர்கள் தயக்கம் காட்டுவதில்லை. பெரிய சினிமா நட்சத்திரங்கள் தாங்கள் கலந்து கொள்ளும் பொது நிகழ்ச்சிகளில் மட்டுமன்றி, தங்கள் ஜீவ தொழிலான படப்பிடிப்பிற்குக் கூட பலமணி தாமதமாக வந்து அதைத் தங்கள் அந்தஸ்திற்குரிய சிறப்பாக நினைக்கிறார்கள். இப்படித் தாமதமாக வருவோரைக் காத்து இருந்து 'ஹீரோ ஒர்ஷிப்' செய்ய நம் மக்கள் தயாராய் இருக்கிறார்கள்.

நமது திருமணங்கள், பொதுக்கூட்டங்கள், வைபவங்கள் எல்லாமே குறிப்பிட்ட நேரத்திற்கு பின்பு தொடங்குவதை ஒருகட்டாய வழக்கமாக வைத்திருக்கின்றன. சரியான நேரத்திற்கு இங்கு வருபவன் முட்டாளாகிறான்.

நமது பொருளாதார காரணங்கள் காலந்தவறாமையைக் கடைபிடிக்க ஒரு தடைக்கல்லாக இருந்தாலும், அதுவே முழுக்காரணமும் அல்ல. ரயில்களும், அரசு அலுவலகங்களும், பல்கலைக்கழகங்களும் காலந் தவறியே செயல் படும்போது, நமது திரை அரங்குகள் மட்டும் மிகச் சரியாக காட்சிகளை தொடங்கி, முடிக்க மட்டும் தவறுவதேயில்லையே!

பலவித இழப்புகளுக்கு உள்ளாகியிருக்கும் நாம் ஈடு செய்ய முடியா கால இழப்பை இனியும் சகிக்க முடியாது. ஒவ்வொரு விநாடியையும் உயிருள்ளதாக்கி செயல்பட வேண்டிய அவசியம் வேறு எந்த நாட்டையும் விட இந்தியாவுக்கு இருக்கிறது!

—சுயராஜ்

FREE E BOOKS - www.thamizham.net / TM1868 / Dec 2010



# மந்திரவாதி அதிகாரியாகிறார்

பால்டி பாபா என்ற 'தந்திரீக' வேலைகள் செய்யும் ஒரு மந்திரவாதி உத்தர பிரதேசத்தின் உணவு, முக்கிய பொருட்கள் கழகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

'என்னால் பக்கெட்டுக்குள் எதனையும் உண்டாக்கிக் காட்ட முடியும். ஆவிகளையும் பேய்களையும் கட்டுப்படுத்த முடியும்' என்று இவர் கூறுவதை, தெருவில் மாயஜால வித்தைகள் பார்க்கும் பாமரர்கள் வேண்டுமானால் அதிசயப் படலாம். ஆனால் உ. பி. யின் அமைச்சர்கள், ஆளும், எதிர் கட்சி தலைவர்கள், முக்கிய மத்திய அமைச்சர்கள், ஏன் இந்திராகாந்தி அம்மையார் கூட இந்த பாபாவை ஒரு மகானாக நினைத்து நமஸ்கரித்திருக்கிறார்கள், என்பது ஆச்சர்யகரமானது.

காலி பக்கெட்டில் இனிப்புகளையும், பழங்களையும் உண்டாக்கிக் காட்ட பாபாவால் முடியுமாயின் ஏன் இவரது 'தந்திரிக்' ஆற்றலால் மாநிலத்தின் காலியான தானிய கிடங்குகளையும், பற்றாக் குறையிலிருக்கும் சிமெண்ட் சர்க்கரை மண்ணெண்ணெய் போன்றவைகளையும் உண்டாக்கித் தர முடியாது? என்று நம்பியோ என்னவோ, உ. பி. முதலமைச்சர் வி. பி. சிங், தனது உணவுத்துறை அமைச்சரைக் கூட கலந்தாலோசிக்காமல் இந்த பால்டிபாபா என்ற ஜெகதீஷ் சந்திர மிஸ்ராவை சென்ற ஏப்ரல்-19 அன்று மாநிலத்தின் உணவு, முக்கியப் பொருள் கழகத் தலைவராக நியமித்திருக்கிறார். அப்பதவியில் ஏற்கனவே வீற்றிருந்த முதலமைச்சரின் செயலாளரும், ஐஏஎஸ் அதிகாரியுமான புரேலால் தூக்கியெறியப்பட்டார்.

முதலமைச்சரின் இந்த விபரீத நடவடிக்கை பல அதிகாரிகளிடமும் அரசியல் பிரமுகர்களிடமும், உ. பி. முழுவதும் எதிர்ப்பு அலையைக் கிளப்பியிருக்கிறது. மனிதர்களைப் புருவாக மாற்றுவேன் என்று மிரட்டிக் கொண்டிருந்த இந்த ஆசாமியின் இருட்டான எதிர்காலம் இப்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன் இந்த 'பாபா' பொதுப்பணித் துறையில் ஸ்டோர் கீப்பராக இருந்து சில மோசடி வேலைகள் செய்து, பிடிபட்டு, நிரூபிக்கப்பட்டு 'கல்தா' கொடுக்கப்பட்டார். இரு முறை கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டும், ஊழல் விவகாரமொன்றில் போலீசால் கைது செய்யப்பட்டும் இருக்கிறார்.

மறைந்தஆசாமி திடீரென 1978ல் 'தந்திரிக்' யோகிமாதிரி தோன்றி அரசியல் வட்டாரங்களின் மன பலவீனர்களை ஆட்டிப் படைத்திருக்கிறார். 'தந்திரிக்' மந்திரங்களில் கண்மூடித்தனமான நம்பிக்கை படைத்த முன்னால் உ. பி. முதலமைச்சர் பனார்சியைக் கையில் போட்டுக் கொண்டு, நகரத்தின் ஆடம்பரமான டைமண்ட் டயரி பகுதியில் ➔

FREE E-BOOKS - www.thamizhan.net / TM1868 / Dec 2010

# பராமரிப்புத் தொகை பெற வழி

## சட்ட விளக்கம்



**மனைவி:**

மனைவியின் சம்மதத்தைப் பெற்று (எழுதி வாங்கி) இரண்டாம் மணம் செய்து கொள்வது சட்டப்படி சரி என்ற பொதுவான கருத்து உள்ளது. முதல் மனைவியை விவாகரத்து செய்யாமல் எந்த காரணத்திற்காக இரண்டாம் மணம் செய்தாலும் சட்டப்படி குற்றமாகும். (முகமதியர்களுக்கு மட்டும் 4 முறை மணம் செய்ய விதிவிலக்குண்டு.) கணவனைப் பிரிந்து வாழும் மனைவி ஏழ்மையில் துன்பப்படக்கூடாது என்பதற்காக, கணவனிடம் பராமரிப்புத் தொகை பெற சட்டம் வழி செய்துள்ளது.

பெற தகுதி: 1. கணவன் கொடுமைக் காரனாக இருந்து மனைவியை அடிப்பவனாகவும் அநாகரிகமாக சண்டை போடுபவனாகவும் இருத்தல்.
2. கணவன் உடலுறவு கொள்ள தகுதியற்ற (ஆண்மைக் குறைவான) நிலையில் இருத்தல்.
3. கணவன் வேறு மணம் செய்து கொள்ளுதல் அல்லது வைப்பாட்டி வைத்துக் கொள்ளுதல்.

தகுதியின்மை: 1. தன்னைப் பராமரித்துக் கொள்ள போதுமான சொத்தோ, வருமானமோ இருத்தல்.
2. தக்க காரணம் இல்லாமல் இருவரும் பிரிதல் அல்லது ஒப்புதலோடு தனித்தனியாக வாழல்.
3. வைப்பாட்டியாக வாழல் அல்லது சட்ட சம்மந்தமில்லாத திருமணம் செய்தல். ➔

---

வசதியான அடுக்கு மாடி குடியிருப்பைப் பெற்றிருக்கிறார். இதற்கான ரூ 2000 வாடகை பாக்கியை இவரிடமிருந்து அரசு இன்னும் வசூல் செய்ய விரும்பவில்லை.

பாபாவை காங்கிரஸ் வேட்பாளராக வித்தான் பரிஷத் தொகுதியில் நிறுத்த உயர் மட்ட தலைவர்களிடமிருந்து எதிர்ப்பு வந்ததால், அதற்கு மாற்றாக இந்தத் தலைவர் பதவி தந்து கௌரவித்திருக்கிறார்கள்.

முதலமைச்சரை ஒரு பத்திரிகையாளர் "இப்படிப்பட்டவரை உணவுக்கழக தலைவராக நியமித்ததற்கு என்ன தகுதியிருக்கிறது" என்று கேட்டதற்கு "இங்குள்ள அமைச்சர்களை நியமித்ததற்கு என்ன தகுதி இருக்கிறது" என்று எதிர் கேள்வி கேட்டாராம். —எழில்

4 ஒழுக்கம் தவறிய வாழ்க்கை தொடர்ந்து வாழல். சந்தர்ப்ப வசத்தால் ஏற்பட்ட ஒழுக்கத் தவறு இந்த உரிமையைப் பாதிக்காது.

பராமரிப்புத் தொகை விவாகரத்து செய்து கொண்ட பின்பும் பெறலாம். அவள் அடுத்த திருமணம் செய்து கொள்ளும் வரை இது நீடிக்கும்.

## குழந்தைகள்:

1) 18 வயது வரை தந்தையிடம் பராமரிப்புத் தொகை பெறலாம்.
2) சட்டப்படியான திருமணத்தில் பிறந்தவரோடு, வேறு விதமாகப் பிறந்தவருக்கும் இந்த உரிமை உண்டு.
3) 18-வயதைத் தாண்டிய குழந்தைகள் மனவளர்ச்சியில்லாமலோ, உடல் ஊனமுற்ற நிலையிலிருந்தாலோ, தொடர்ந்துதொகை பெறலாம்.
4) காயம் ஏற்பட்டு தன்னைப் பராமரிக்க முடியாத நிலையிலிருக்கும் பிள்ளைகளும் தந்தையிடம் வாய்ப்பிருக்கும் பட்சத்தில் இந்த உரிமையைப் பெறலாம்.

## பெற்றோர் :

தாயோ, தந்தையோ தம்மைப் பராமரித்துக் கொள்ள முடியாத நிலையில் மகனுக்குப் பணவசதி இருந்தால், பராமரிப்பு உரிமை பெறலாம். இந்த உரிமை குற்ற நடைமுறைச் சட்டம் பிரிவு-125இல் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த சட்டப் பிரிவின்படி வழக்குப்போட்டால் அதிகப் பட்சமாக ரூ. 500 வரை பெற்றுத் தர நீதி மன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

சம்மந்தப்பட்ட நபர் தற்காலிகமாக இருக்கும் பகுதி, நிரந்தர முகவரி, மனைவி வசிக்கிற பகுதி, கடைசியாக வாழ்ந்த பகுதி-இவற்றில் எங்கிருந்தும் வழக்குத் தொடுக்கலாம்.

மேற்சொன்னவை அனைத்து சமயத்தினருக்கும் பொருந்தும். இது தவிர இந்துக்களுக்கு மட்டும் இந்து திருமண சட்டத்தில் கீழ்க்கண்ட பராமரிப்பு உரிமைகள் உண்டு.
1. தாய் தந்தையர் தங்கள் மகளிடமும் பராமரிப்புத் தொகை பெறலாம்
2. குழந்தைகள் மைனராக உள்ள வரை தந்தையிடம் மட்டுமன்றி தாயிடமும் பெறலாம்
3. பெண் குழந்தைகள் திருமணம் ஆகும் வரை இவ்வுரிமை பெறுகிறார்கள்
4. விதவையான மருமகள் தன் மாமனாரிடம் தனது கணவனது சொத்திலிருந்து போதுமான வருவாய் இல்லாத போதும், அத்துடன் தனது பெற்றோரிடமிருந்தும், பிள்ளைகளிடமிருந்தும் வழியில்லாத போதும் பராமரிப்பு உரிமை கோரலாம். மறுமணம் செய்து கொண்டாலோ, மதம் மாறினாலோ, இவ்வுரிமையை இழந்து விடுவர்.

**தொகை கணக்கிட கணக்கில் கொள்ள வேண்டியவை:**

1. சம்மந்தப்பட்டவரது தராதரம் வாழ்நிலை. 2. தொகை கோருவோரின் நியாயமான தேவை. 3. தனித்து வாழ தக்க காரணம் இருக்கிறதா என்பது. 4. தொகை கேட்பவரின் சொத்து, வருமானம் (சொத்தின் மூலமும், சொந்தமாகவும்). 5. சட்டப்படி உரிமை பெற்ற நபர்களின் எண்ணிக்கை.

**பராமரிப்பு என்பது:** உணவு, உடை, வீடு, படிப்பு மற்றும் மருத்துவ வசதியும் சிகிச்சையும் சேர்த்து கணக்கிடப்பட வேண்டும். மணமாகாத மகளுக்கு நியாயமான திருமணம் சம்மந்தப்பட்ட செலவும் சேர்ந்ததே.

—மானுடன்

• இதில் சுட்டி வாசகர்க்கு மட்டும் இலவச சட்ட ஆலோசனை சுட்டி வழக்கறிஞர் குழுவால் வழங்கப்படும். உறைமீது சட்ட ஆலோசனை எனக் குறிப்பிடுக. பக்கத்தில் உள்ள பகுதியை கத்தரித்து இணைத்து அனுப்புதல் அவசியம்.




**தமிழ்நாடு மக்கள் உரிமைக் கழக முதல் மாநாடு**

தமிழ்நாடு மக்கள் உரிமைக் கழகத்தின் முதல் மாநில மாநாடு 1982 ஜூன் 19, 20-ல் சென்னை டி. நகர் உஸ்மான் சாலை 'சுந்தர் பாக் ஹாலில்' நடைபெறும்.

உழைத்து வாழும் நமக்குப் போராட்டம் தேவை - உழைக்காமல் வாழும் கூட்டம், நாம் போராடும் உரிமையைப் பறிக்கிறது. இந்நிலை தொடராமலிருக்க மக்கள் உரிமைகளை நிலைநாட்ட, எங்கள் மாநாடு வெற்றி பெற தாங்கள் கலந்து கொண்டு, தங்களால் இயன்ற நிதி உதவியைத் தாராளமாய் தாரீர் என வேண்டுகிறோம்.

இங்ஙனம்

பி. வி. பக்தவச்சலம், எம்.ஏ., பி.எல்
தலைவர் ம. உ. க:
7, கிருஷ்ணகிரி சாலை, திருப்பத்தூர்-635 601

FREE E BOOKS - www.thamizham.net / TM1868 / Dec 2010

## ங்கை மங்கை மங்

குடிசைக்கு 'ராணி' சொல்லும் செய்திகளை வண்ணத்தில் அதிக விலையில் மாளிகைக்குச் சொல்லும் பத்திரிகை மங்கை.

மங்கையின் பல வண்ண அட்டைப் படத்தை அலங்கரிக்கும் பெண்கள் எல்லாம், வளமையும், இளமையும் கொழிக்கும் பெண்களாகவோ அல்லது பதவியிலோ, உயர் மட்டத்திலோ அமர நேர்ந்த பெண்களே! வறுமைக் கோட்டுக்குக் கீழே வீட்டிலும், வெளியிலும், கணவனாலும் சமுதாயத்தாலும் வஞ்சிக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு வரும் பெண்களைப் பற்றி இதன் கதைகள் கட்டுரைகள் போல அட்டைப்படமும் சுட்டிக் காட்ட என்றும் முன் வந்ததில்லை.

மங்கையின் கதைகளிலும், கட்டுரைகளிலும், பேட்டிகளிலும் பெண் டாக்டரோ, டீச்சரோ, பாங்கில் வேலை செய்பவரோ, கல்லூரி மாணவியோ, தொழிலதிபர் மனைவியோ தான் திரும்பத் திரும்ப பார்க்கிறோம். கட்டடத் தொழிலாளப் பெண், ஆடை ஏற்றுமதி நிறுவனத்தில் தைக்கும் பெண், மருந்துக் கம்பெனியில் உழைக்கும் பெண், வீடு வீடாகச் சென்று விற்பனையாளராக ஏறி இறங்கி வரும் பெண், பட்டாசுத் தொழிற்சாலைகளில் பாடுபடும் பெண், இப்படி கோடிக்கணக்கில் வாழ்வின் வசீகரங்களுக்கெல்லாம் அந்நியமாகிப் போன பரிதாபத்திற்குரிய பெண் குலத்தின் வேதனைகளை இந்த ''மங்கை'' தீண்டுவதேயில்லை.

விமானப் பணிப் பெண்களைப் பற்றி (1-2-76) சொல்லும் இதன் கவர்ச்சிகரமான கட்டுரை கூட அவர்கள் வசீகரத் தேவைகளைப் பற்றி சொன்னதே தவிர, இப்பெண்களின் வேலைப்பாதுகாப்பின்மையோ, பிற அடிப்படை பிரச்சனை பற்றியோ பேசவேயில்லை.

பெண்கள் ஆண்டில் கட்டுரை வாசகியரைக் கவர்ந்த பெண் திலகமாக மங்கையால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் திருமதி. ராஜம்மாள் தேவதாஸ். பாரதியின் புதுமைப் பெண்ணாக சித்தரிக்கப்பட்ட இவர் தான் அவினாசிலிங்கம் பெண்கள் கல்லூரி முதல்வர். காலதாமதமாக வந்ததற்காக ஒரு கர்ப்பமுற்றபெண் பேராசிரியையை மைதானத்தில் ஓடச் சொல்லி கருக்கலைத்து பெண் இனத்திற்குப் 'புகழ்' சேர்த்தவர். இந்த அம்மையாரின் அராஜக செயல்களுக்கு ஆசிரியைகள் பலியான காரணத்தால் தான் தமிழக கல்லூரிக் கல்வி உலகமே சென்ற ஆண்டு போராட்டத்தில் குதித்தது. மங்கை காட்டும் பெண் திலகங்களில் இவரும் ஒருவர். (15-2-76) இந்த வரிசையில் இப்படிப் பட்டோர் ஏராளம்.

பெண்களின் வாழ்வில் அன்றாடம் சந்திக்கும் அடிப்படை பிரச்சனைகளை விட 'தாலியை மஞ்சள் கயிற்றில் தான் அணிய வேண்டுமா அல்லது தங்கச் சரட்டில் அணிவது சிறப்பா' என்று கலந்துரையாடல் (1-3-76) நடத்துவது மங்கைக்கு அவசியமாகப்படுகிறது. விஞ்ஞான ரீதியாக RH பாக்டர் போன்ற இரத்த பொருத்தங்களை வைத்து திருமண பொருத்தங்களை பார்க்கும் தேவையான முற்போக்கு கட்டுரைகளை வெளியிடுவதை விட்டு, ஜோதிடர் K. N. சரஸ்வதி போன்றோர் ஜாதகப் பொருத்தம் பார்த்தே தீர வேண்டிய அவசியத்தை பற்றி அழுத்தமாக எழுதும் கட்டுரைகளை அவ்வப்போது 'சேவையாக' வெளியிடுகிறார்கள்.

'சடங்குகள் சம்பிரதாயங்கள் 'சமுதாயம் என்கிற அரிசி' கெடாமலிருக்க உதவும் உமி. அதனால் நாம் எல்லாவற்றையும் களைந்திடவும் முடியாது. (1-6-77) என்பதே எப்படி சுற்றி வளைத்து முற்போக்காக கட்டுரைகள் எழுதினாலும் மங்கை தரும் முடிவாகும்.

அத்தி பூத்தாற்போல அவ்வப்பொழுது சில நல்ல மருத்துவக் குறிப்புகள் இயற்கை மருத்துவம், சட்ட ஆலோசனை ஆகியவை பாராட்டும்படி இடம் பெறுவதுண்டு. ஆனால் அதிக கவர்ச்சியையோ, விற்பனை உயர்வையோ இது போன்றவை ஏற்படுத்துவதில்லை என்பதால் இவை தொடர்ந்து, இடம் பெறுவதில்லை.

இந்தப் பத்திரிகை விளக்கும் சமையல் கலையைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றால் மாதம் ஐயாயிரம் ரூபாய் வருவாய் வேண்டும்; முக்கனி அல்வா, பாதம் பருப்பு ரசம், முயல் பிரியாணி போன்ற சமையல் குறிப்புகள் சாமான்யர்கள் நினைத்துக் கூட பார்க்க முடியாத சமாச்சாரங்கள்.

ஜமீன்தார் வீட்டு சமையல்களை ஒரு பக்கம் வண்ணத்தில் போட்டு விட்டு வேறொரு இடத்தில், கற்பகம் நடுத்தர வாசகிகளுக்கு இப்படி பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். (1-12-77)

கே : பட்ஜெட்டிற்குள் செலவை அடக்க முடியவில்லையே!

பதில் : கிருத்திகை, ஏகாதசி, சனிக்கிழமை போன்ற நாட்களில் விரதம் இருக்கப் பழகிக் கொள்ளுங்கள்-குடும்பத்தோடு!

→

FREE E BOOKS - www.thamizham.net / TM1868 / Dec 2010

மங்கை இதழ் சந்தமாமா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமானது. தமிழகத்தின் கோடீசுவர குடும்பமான நாகி-ரெட்டி சக்ரபாணி குடும்பத்திற்கு இது சொந்தம். ஆசியாவின் மிகப்பெரிய படப்பிடிப்பு நிலையங்களும், இந்தியாவின் மிக நவீனமான அச்சுக் கூடங்களும், பிரமாண்டமான படக்கம்பெனிகளும், இக்குடும்பத்திற்குச் சொந்தமானவை. எனவே இப்பத்திரிகையும் மசாலா பத்திரிகைகளின் வியாபார தர்மத்திற்கு ஏற்பவே நடத்தப்பட்டு வருவதில் ஆச்சர்யமில்லை.

பெண்களை நம்பி வணிகம் நடத்தும் விதவிதமான துணிக்கடைகள், பாஷன் கடைகள், கோல்ட் கவரிங் கடைகள், அழகு சாதனக் கடைகள் இவற்றின் வியாபாரம் பெருக மங்கை இதழ் மகத்தான சேவை செய்து வருகிறது. 'மங்கை'யின் கால்வாசி பக்கங்கள் இந்த நவீன பொருட்களை வாங்க நமது பெண்களைத் தூண்டுகின்றன.

மங்கையில் வரக்கூடிய படங்களைப் பார்த்தால் அவை பெண்களுக்கென நடத்தப்படும் பத்திரிகையாகத் தெரியவில்லை. மங்கையரின் அங்க லாவண்யங்களை இப்படி வரைந்து காட்டி விற்பது, நிழல்களைப் பார்த்து இச்சிக்கும் பருவக் கோளாறு கொண்ட வாலிபர்களையும் வாடிக்கையாளர்களாக்கத் தான் என்பது புரிகிறது.

பெண்கள் சோரம் போவதும், வைப்பாட்டியை சக்களத்தியாக ஏற்றுக்கொள்ளும் பக்குவமும் முற்போக்குத்தனமானது என்பது போல வரும் வக்கரிப்புகள் இதன் பல கதைகளில் கருவாக அமைந்துள்ளன. இது சில மேட்டுக் குடியினரின் திமிர்த்தனங்களை நியாயப்படுத்தும் வியாபாரத்தனம் என்பதும் புரிகிறது.

பெண் என்ற மாபெரும் அற்புதத்தை, சக்தியை மங்கை ஒருபொழுதும் ஓவியமாகவோ அல்லது காவியமாகவோ தீட்டியதில்லை.

பெண்ணின் பெருமையைப் பாரதிக்குக் காட்டிய நிவேதிதா அம்மையாரைப் போல மங்கைக்கு ஒரு நிவேதிதா தேவை என்பது தான் நம்முடைய அவா!

''பொம்மை'' பத்திரிகை வெளியிடும் அதே இடத்தில், அதே அச்சகத்தில் அதே ஆசிரியரால், வெளியிடுபவரால், தான் மங்கையும் வெளிவருகிறது. பெண்களும் பொம்மைகள்தான் என்ற கருத்தைப் பிரதிபலிக்கத்தான் அவ்வாறு செய்யப்படுகிறது போலும்! பொம்மை சமுதாயத்துக்கு என்ன சேவையைச் செய்கிறதோ, அதற்கு மேல் மங்கை எந்தவித சேவையும் செய்து விடவில்லை.

—கி. சா, இலை


(அடுத்து கலைமகள்)

'மங்கை' விமர்சனமே ஓரளவு 'மங்கையர் மலரு'க்கும் பொருந்துவதால் தனி விமர்சனக் கட்டுரை தேவையில்லை.

## சுட்டி விற்பனையாளர்கள்

சுட்டி விற்பனையாளா எல்லா ஊர்களிலும் தேவை.

சுட்டியின் வளர்ச்சியிலும் கொள்கையிலும் ஆர்வம் இருந்தால் நல்லது.



தேர்தல்கள்
மழைக் காலங்களில்
நடத்தப்படுவதில்லை
மழையில்
அரசியல் வாதிகளின்
வேஷங்கள்
கலைந்து விடக்கூடாது
என்பதால்தான்.

—த. ராஜசேகரன்



குற்ற ஆறுகளில்
கரன்சி வெள்ளம்
பெருகும் போதெல்லாம்
நமது
சட்ட நாணல்
வளையும்.

—விழியன்பன்



''கல்வி கற்க இங்கு வந்துள்ள நாங்கள் மற்றவர்களைவிட இரு மடங்கு வாடகை வசூலிக்கப்படுகிறோம். எனினும் நோட்டீஸ் இன்றி எங்களை வெளியேற்றுகிறார்கள். சிறு பையன்கள் கூட எங்களைக் கிண்டல் செய்து இளக்காரமாகப் பேசுகிறார்கள். வெளி நாட்டவர் என்பதால் எல்லாக் கேவலங்களையும் பொறுத்துக் கொள்ள வேண்டிய நிலை. இந்தியாவும், ஆப்ரிக்காவும், காலனி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி பல விஷயங்களில் ஒத்திருக்கும் என நினைத்திருந்தோம். ஆனால் ஒரு ஆப்ரிக்கன், ஐரோப்பாவில் இருந்தாலும் அமெரிக்காவில் இருந்தாலும், இந்தியாவில் இருந்தாலும், எல்லாம் ஒன்று தான் எனத் தெரிகிறது'' —ஆப்ரிக்க மாணவர்கள் சந்திப்பில்.

FREE E BOOKS - www.thamizham.net / TM1868 / Dec 2010

# அண்டார்டிகா




இந்தியாவையும், சீனாவையும் சேர்த்த நிலப்பரப்பைவிடப் பெரியது. அண்டார்டிகா என்ற தென் துருவ பனி பூமி 'பசிபிக், அட்லாண்டிக், இந்தியக் கடல்கள் சூழ உள்ள இந்தப் பனிக்கண்டத்தில் உலகத்தின் 90% பனிக்கட்டிகள் உறைந்துள்ளன.

17-1-1772-ல் அண்டார்டிக் வட்டத்தை காப்டன் குக் தனது கப்பலில் கடந்து சென்று சாதனை நிகழ்த்தினார். அதன் பிறகு இங்குள்ள கடல் விலங்குகளை வேட்டையாடி வியாபாரம் செய்ய அமெரிக்க, ஐரோப்பிய கப்பல்கள் வர ஆரம்பித்தன. உலகிலேயே அதிகமான நிலக்கரி இந்த பூமியில் புதைந்துள்ளது. 50 மில்லியன் பீப்பாய் பெட்ரோலியம் இங்கு தேங்கியுள்ளது. அது மட்டுமன்றி இரும்பு, யூரேனியம், ப்ளாட்டினம் போன்ற உலோகங்கள் பெருமளவு காணப்படுகின்றன.

1957-ல் இங்கிலாந்து விஞ்ஞானிகள் குழு அண்டார்டிகாவிற்கு சென்று அவ்வுண்மைகளை அலசி ஆய்ந்து விட்டது. பின்னர் 1959-ல் அமெரிக்கா, சோவியத் உட்பட இங்கு வந்து ஆய்வு நடத்திய 12 நாடுகள் 'அண்டார்டிகா ஒப்பந்தம்' என்ற முக்கிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. அதன்படி இப்பகுதியை யாரும் இராணுவ காரியங்களுக்குப் பயன் படுத்தக் கூடாது. அறிவியல் ஆய்வுக்கு மட்டுமே இந்த கண்டம் சொந்தமானது. மேலும் 7 நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் சேர்ந்துள்ளன. (இந்தியா இல்லை)

இந்த ஒப்பந்தம் சரியாக தொடர்ந்து செயல்படுமானால் எல்லோருக்கும் சொந்தமான உலகத்தின் முதல் சர்வதேசமாக அண்டார்டிகா விளங்கும். ஆண்டுதோறும் நார்வேயிலிருந்து கப்பல்களும், நியூசிலாந்திலிருந்து விமானங்களும் சுற்றுலா பயணிகளை ஏற்றிக் கொண்டு இங்கு வருகின்றன.

இந்தியா அண்டார்டிகாவிற்கு 2 கோடி செலவில் சாதனையாக இவ்வாண்டு அனுப்பிய "கங்கோத்ரி" என்ற ஆய்வுக் குழு வானிலை பற்றிய அறிவை வளர்க்க சென்றதாகச் சொல்லப்படுகிறது. அண்டார்டிகாவில் 12 நாடுகளின் ஆய்வுக் கூடங்கள் இயங்குகின்றன. இந்தியாவிற்கு இந்த உறுப்பு நாடுகளுடன் சேரும் விஞ்ஞானத் தகுதி இன்னும் அளிக்கப்படவில்லை.

ஏற்கனவே அணுசக்தி, விண்வெளி இயல் போன்ற அனைத்துலகத் துறையில் நாம் செய்த பணக்கார பரிசோதனைகளின் பலன்கள் நம் மக்களுக்கு இன்னும் வந்து சேரவில்லை! அண்டார்டிக் ஆய்வும் இதில் ஒன்றாகிவிடுமோ?

—உலகப்பன்




FREE E BOOKS - www.thamizham.net / TM1868 / Dec 2010

# ஆழ்ந்த மூச்சு — ஒரே மருந்து!

அந்தக் காலத்தில் எங்கள் ஊரில் ஐலு நாய்க்கர், ராமசாமி நாய்க்கர் என்று இரண்டு நாட்டு வைத்தியர்கள் இருந்தார்கள். அவர்களிடம் பெரிய எலுமிச்சம்பழம் அளவுக்குக் கருப்பான மருந்து உருண்டை ஒன்று உண்டு. யாராவது பேதிக்குப் போகிறது; நிற்க வேண்டும் என்று வந்தால் அந்தக் குளிகையைக் கல்லில் உரைத்து நாக்கில் தடவுவார்கள். நின்று போய்விடும். பேதிக்குப் போக வேண்டும் மலச்சிக்கலாக இருக்கிறது என்றால், அப்படியே உரைத்து நாக்கில் தடவுவார்கள். 4 தடவை பேதிக்குப் போகும். இப்படி எல்லாவற்றிற்கும் ஒரே மருந்து இருப்பதை நான் பார்த்திருக்கிறேன்.

அது போல எந்த வியாதியாக இருந்தாலும் முதலில் செய்ய வேண்டியது ஒன்று. அதை யாரும் எந்த நேரத்திலும் செய்து நோய்களிலிருந்து விடுபடலாம். செய்வது எளிது. கொஞ்சம் வயதானவர்களுக்கு இது சமய சஞ்சீவி. அது தான் மூச்சு இழுத்தல் பயிற்சி.

உடம்பு என்பது ஒரு பெரிய உலகம். உலகில் கடல் கொந்தளிப்பு இருப்பது போல வயிற்றுக்குள்ளே கொந்தளிப்பு, புரட்டல். சில சமயங்களில் எரிமலை எரிகிறது. அதே போல நம் உடலிலும் முகம் திகு திகு என்று சுவாலை விடுவது போலத் தகிக்கும். உலகில் பெரிய சூறாவளி தோன்றும். அதே மாதிரி என்னமோ ஒன்று நம் உடலையும், உள்ளத்தையும் அலைக்கழிக்கும். வெளியே சீதோஷ்ணம் மாறுவது போல நம் உடம்பிலும் சூடு ஏறி இறங்கும். கோடையில் உஷ்ணம் 108, 110 என்று ஏறுவது போல உடலிலும் 102, 103 க்குப் போய் நிற்கும். அதை ஜுரம் என்கிறோம். இப்படி ஏதோ ஒரு தொந்தரவு திடீர் திடீர் என்று உடம்பில் தோன்றும். அப்போதெல்லாம் என்ன செய்வது? உடனே மருத்துவரைத் தேடாதீர்கள். ஒன்றும் செய்ய வேண்டாம்.

ஆழ்ந்த மூச்சு (Deep Breath) இரண்டு மூன்று இழுத்து விடுங்கள். சில சமயங்களில் உடம்பில் சுருக் என்று வலி தோன்றும். அப்போது 4 தடவை பெருமூச்சு இழுத்து விடுங்கள். வயிற்றைப் புரட்டும். அப்போதும் அப்படியே 4 மூச்சு இழுத்து விடுங்கள். ஏதோ ஒன்று ஞாபகத்திற்கு வரவில்லையா! அப்போதும் 4 மூச்சு இழுத்து விடுங்கள். "கொட்டாவி" விடுகிறோமே அதை என்னவென்று நினைக்கிறீர்கள். உடலில் அவ்வப்போது ஏற்படும் பிராணவாயுப் பசியைத் தணிக்க இயற்கை செய்யும் மூச்சு இழுப்புப் பயிற்சியே கொட்டாவி. ஆனால் நாம் செய்யும் போது வாயை மூடி மூக்கால் மட்டுமே மூச்சை இழுத்து விட வேண்டும்.

ஆழ்ந்த மூச்சு எப்போதெல்லாம் இழுத்து விட முடியுமோ செய்யுங்கள். அது ஒன்றே எல்லாவற்றிற்கும் கைகண்ட மருந்து.

—சுடர்பாரதி

FREE E BOOKS - www.thamizham.net / TM1868 / Dec 2010

# உயிர்க்காலேஜ் "செத்தகாலேஜா"கிறது

122 வயதுடைய சென்னை மிருகக்காட்சி சாலை தனது ஆயுளின் கடைசி நாட்களில் இருக்கிறது. சுமார் ஓராண்டில் இது வண்டலூருக்கு மாற்றப்படும் திட்டமிருப்பதாலோ என்னவோ, கேள்வி கேட்பாரின்றி அநாதையாக்கப்பட்டிருக்கிறது.

எனினும் வேடிக்கை பார்ப்பவர்களின் தொகையோ, வசூலோ குறையவில்லை. மாநகராட்சிக்குச் சொந்தமான இந்த இடம் ,மாநகராட்சியின் குப்பை வண்டி மாதிரியே இருக்கிறது. மிருகங்களைப் போல, தாவரங்களும் வறண்டு கிடக்கின்றன. மிருகக் கூண்டுகளுக்குப் பக்கத்தில் சென்றால் கம்பிகளின் அழுக்கும், துருவும் ஒட்டிக்கொள்கிறது. ஒரே மாமிச அழுக்கு நாற்றம்.

விலங்ககத்தின் நடுவே ஓடும் கால்வாயைக் கடக்க கட்டப்பட்ட இரு மரப்பாலங்களில் பாதி நிர்வாணமாகி, பக்கத்து மூர்மார்க்கெட் சாமான்களை வைத்து ஒட்டு வேலை செய்திருக்கிறார்கள்.

சிங்கத்தை உசுப்பிக் காட்ட, மேலே நின்று கொண்டு கல்லால் அடிக்கிறார்கள். பாவம் கிழண்டு போய், பட்டினியாலும் நோயாலும் பசுமாட்டைப்போலத் தோற்றமளிக்கும் சிங்கம், கல்லடியையும் வாங்கிக்கொண்டு, நகரத் தெம்பில்லாமல் அசந்து கிடக்கிறது சிங்கம் பயங்கர வனவிலங்கு என்று குழந்தைகளுக்குச் சொன்னால் சிரிக்கிறார்கள். காட்டு ராஜாவை கார்ப்பரேஷன்காரர்கள் இப்படிப் பரிதாபமாக்கியிருக்கிறார்கள். காட்டு ராஜாவின் கதியே இது வென்றால் மற்றவை பற்றி சொல்ல வேண்டாம்.

இருக்கும் ஒரே மனிதக்குரங்கையும், ஊழியர்கள், யார் வந்தாலும் கையை நீட்டி காசு வாங்கும் பிச்சைக்காரக் குரங்காக பழக்கி இருக்கிறார்கள். அது சில்லறை வாங்கி ஊழியர் சட்டைப்பையில் போடுகிறது. பாதி மிருகங்கள் பட்டினியாலும், பராமரிப்பின்மையாலும் செத்தே விட்டன. வண்டலூருக்கு மாற்றுவதற்குள் மீதியையும் ஒரு வழி செய்து விடுவார்கள் போலிருக்கிறது. பாதி கூண்டுகளில் பல்லியும், கரப்பானுமே காணப்படுகின்றன. ஒட்டகம் ஒட்டகச் சிவிங்கி, காண்டாமிருகம், நரி, பாம்புகள், புலி வகைகள், போன்ற முக்கிய மிருகங்களை இங்கு பார்ப்பதற்கில்லை.

எஸ். பி. சி. ஏ காரர்களுக்கு மிருகக்காட்சி சாலையில் நுழைய தடையோ என்னவோ! வண்டலூருக்கு மாற்றலாகும். இந்த மிருகக் காட்சி சாலையிலும் மிருகங்கள் பல செத்து வருகின்றனவாம். திரைப்படத்தை விட்டால் இந்நாட்டு மக்களுக்கு வேறு நல்ல பொழுது போக்கிற்கு வழி இல்லை. மிருகக்காட்சி சாலை போன்ற மாற்று பொழுது போக்குகளைத் தீவிரப்படுத்த அரசு முனைவதில்லை என்பதற்கு என்ன காரணம்?

—ஸ்டெனிஸ்லாஸ்

# உங்கள் குமுறல்

☐ சென்னை வள்ளுவர் கோட்டம், திறந்து வைக்கப்படும் நேரம் காலை 9 முதல் மாலை 7 வரை. ஆனால் மாலை 6க்கே கவுண்டரை மூடிக்கொண்டு கிளம்பி விடுகிறார்கள். எனவே டிக்கெட் கிழிக்கும் தொழிலாளியே காசு வாங்கிக்கொண்டு, உள்ளே அனுப்புகிறார். மேல் மாடியில் உள்ள 3 நீர்த்தொட்டிகள் நீரைப்பார்த்து நெடுநாளாகி விட்டன. வள்ளுவர் கோட்டம் அருகே வண்டி வண்டியாக மாநகரத்து குப்பைகளை லாரிகள் கொட்டுகின்றன. கொசுத்தொல்லையும் துர்நாற்றமும் பயணிகளால் சகிக்க முடியவில்லை. வள்ளுவர் கோட்டம் எதிரே சாராயக்கடை! அதில் நன்றாக போட்டு விட்டு குடிபோதையில் வரும் சிலர் சுற்றுலா பயணிகளைக் கலாட்டா செய்கிறார்கள். வள்ளுவருக்கு இப்படியொரு அவமானம் தேவையா?

—எம். சீனுவாசல், 54 காமராஜபுரம், சென்னை—34

☐ ஏற்காட்டில் கோடை விழா நடந்தது. இச்சிறந்த சுற்றுலா தலத்திற்கு இலட்சக்கணக்கில் பயணிகள் வருகிறார்கள் ஆனால் ஏற்காட்டில் பொதுக் கழிப்பறை ஒன்று கூட கிடையாது. இயற்கை உபாதைகளுக்கு மக்கள் எங்கே செல்வார்கள். ஏரி ஒன்றுண்டு. அதிலிருந்து தான் ஏற்காட்டுக்கு குடிநீர் செல்கிறது. சில பகுதிகளைத் தவிர மீதி இடங்களில் குடிநீர் சுத்தம் செய்யப்படாமல் அப்படியே வருகிறது ஏரித்தண்ணீர் - லேசான துர்நாற்றத்துடன் மஞ்சள் நிறமாக இருக்கிறது. ஏரியின் அருகே அமர்ந்து சாப்பிடுபவர்களும், ஏரியைச் சுற்றியுள்ள ஓட்டல், டீக்கடை காரர்களும் ஏரித்தண்ணீரை அப்படியே உபயோகிக்கிறார்கள்? பயணிகளுக்கு ஏன் தொற்று நோய் வராது? முக்கிய பகுதியான லேடி சீட்டிலும் இதே நிலை தான்! கையில் தண்ணீர் கொண்டு வராவிடில். கூல்டிரிங் இரண்டு மடங்கு விலை கொடுத்தே வாங்க வேண்டும்.

பஸ்களில் எள் விழ இடமிருப்பதில்லை. 25க்கும் மேற்பட்ட கொண்டை ஊசி வளைவுகளைக் கொண்ட மலைப்பாதையில் பஸ் இப்படி போனால் உயிருக்கும், உடமைக்கும் உத்தரவாதம் இல்லை.

புழு, பூச்சி வராத ருட்களில் கூட பஸ்விடும் எ. டி. சி நிர்வாகம் கூடுதலாக 10 நாளைக்கு மட்டும் அதிகப்படி பஸ்களைவிட கஞ்சம் பிடிக்கிறது. மிக அடிப்படை வசதிகள் கூட செய்து தராமல் மலர்க் கண்காட்சி, பழக்கண்காட்சி என்று நடத்துவதில் அர்த்தமென்ன?

—சோ. வ. இளஞ்சேரன், [illegible]

☐ எங்கள் திருப்பூரைப் பொறுத்தவரை மின்சாரம் தான் வாழ்வின் அச்சாணி மின்வெட்டால் 1200 தொழிற்சாலைகளில் கூலி வேலை செய்யும் 1 லட்சம் பேரின் வயிற்றில் அடிப்பது அரசுகளா? அதிகாரிகளா? என்று கண்ணாமூச்சி விளையாட்டாகவே உள்ளது. இரவில் கூட மின்சாரம் இல்லாததால் பல விபத்துகள் நடந்துள்ளன. சமீபத்தில் பஸ்நிலையத்தில் இருக்கும் சைக்கிள் நிறுத்தகம், காய்கறி மார்கெட், பெட்டிக்கடைகள் உட்பட ரூ 10,000 மதிப்புள்ள கீற்றுக் கொட்டகைகள் தீ விபத்துக்குள்ளாயின. 150 சைக்கிள்கள் உருகின. மின்சாரம் இல்லா இருட்டில், இதற்கு காரணம் கண்டுபிடிக்க முடியவில்லை. அதே வாரம் பக்கத்து பெரிச்சி பாளையம் கிராமத்தில் குடிசைகளுக்கு மின்இணைப்புக் கொடுக்கும் திட்டத்தின் லட்சணம், 300 குடிசைகள் எரிந்தன. வயரிங் கவனக்குறைவு! இருட்டில் தீயை அணைக்க வந்த தீயணைக்கும் வண்டி மீது சைக்கிள் வாலிபர் மோதி மருத்துவமனையில் பரிதாபமாக செத்தார். இரண்டு மணி நேரம் சேர்ந்தாற் போல மின்சாரத்தைப் பார்த்து பல மாதங்கள் ஆயின. முடிவு தெரியாமல் திருப்பூர் நகர மக்களும், பனியன் தொழிலாளரும் இருண்டுள்ளனர்.

—இரா. விஜயக்குமார்.

☐ உடுமலை நகராட்சி குடிதண்ணீர் வரி பிரதி மாதம் 10 ஆம் தேதிக்குள் கட்ட வேண்டுமென சினிமா தியேட்டர்களிலும், நகராட்சி அலுவலகத்திலும் கடுமையாக விளம்பரப்படுத்துகிறார்கள். அதன்படி பணம் கட்ட 10 ஆம் தேதிக்கு முன் சென்றால், அடுத்த மாதம் கட்டுங்கள் என்கிறார்கள், அடுத்த மாதம் சென்றால் ஆடிட் நடக்கிறது; அடுத்த மாதம் வாருங்க என்கிறார்கள். இப்படியே மாதாமாதம் அலைய விடுகிறார்கள். தொகையும் பெரிதாக சேர்ந்து விடுகிறது. அதிகாரிகள் உடனடியாக இதனைக் கவனிப்பார்களா?

—மு. ஆறுமுகம் உடுமலைப்பேட்டை

☐ எங்கள் ஆத்தங்குடி கிராமத்தில் (காரைக்குடி வட்டம்) சுமார் ஐயாயிரம் குடும்பங்கள் உள்ளன. இங்கு ஓர் அரசினர் மருத்துவமனை தேவையென முன்பு மக்களிடமே ரூ 10,000 வரை நிதி வசூல் செய்து அப்போதைய செய்தித்துறை அமைச்சர் திரு. செ.பூவராகவன் அவர்களிடம் அன்றைய கல்லல் ஊராட்சி ஒன்றிய சேர்மன் செம்பனூர் திரு. மாணிக்கம் தலைமையில் அளிக்கப்பட்டது. இதற்கான இட ஒதுக்கீடு செய்து 23-10-1962 இல் அமைச்சர் பூவராகவன் அடிக்கல் நாட்டிச் சென்றார். 20 ஆண்டுகள் ஆகியும் கட்டிட வேலையே தொடங்கவில்லை! ரூ 10,000 என்னஆனதோ தெரியவில்லை. ஒவ்வொரு தேர்தலிலும் இப்பிரச்சனையைத் தீர்ப்பதாய் சொல்லி அரசியல் வாதிகள் வாக்குகளைப்பெற்று சட்ட மன்றங்களுக்கு சென்றுள்ளனரே தவிர மருந்தகம் வெறும் கனவாகவே நிற்கிறது. —அ. சேக் அப்துல்லா,

FREE E BOOKS - www.thamizham.net / TM1868 / Dec 2010

# முற்போக்குப் பத்திரிகைகள் இணைய வேண்டும்

இந்நாட்டு பாமரர்களை சினிமாவுக்கு அடுத்தபடியாக ஆட்டிப் படைக்கும் பத்திரிகைகளின் சக்தி மகத்தானது.

வீழ்ந்து கிடக்கும் நம் சாமான்யர்களை உயர்த்தவும், நசுக்கப்பட்ட பலவீனர்களை ஓரணியில் திரட்டி தங்கள் உரிமைகளை மீட்டுத்தரவும், சமூக நீதியை நிலை நாட்டி ஏற்ற தாழ்வற்ற சமூக அமைப்பை நிலை நாட்டவுமே இச்சக்தி பயன்பட்டாக வேண்டும். இந்நாட்டுப் பத்திரிகைகளின் தார்மீகக் கடமை இது.

துர் அதிஷ்ட வசமாக நமது தமிழ்ப் பத்திரிகைகள் நேர்மையற்ற வணிகர்கள் கையில் சிக்கியிருக்கின்றன. மக்கள் விரோத சக்திகளும் காமாந்தகர்களும், இலட்சக்கணக்கில் விற்கும் மசாலா பத்திரிகைகளை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். மக்களை தட்டியெழுப்பி அறிவூட்டுவதற்கும், விழிப்பூட்டுவதற்கும் பதிலாக அவர்களுக்கு மூன்றாந்தர கவர்ச்சி செய்திகளை ஊட்டி மந்தப் படுத்துகிறார்கள்.

இந்த மாயையிலிருந்து மக்கள் விடுபடவே மாட்டார்களா என்ற ஏக்கத்தைத் தீர்ப்பது போல, தமிழகத்தின் பல மூலைமுடுக்குகளிலிருந்து புற்றீசல்களாக சமுதாய பிரக்ஞையுடைய முற்போக்கு ஏடுகள் நிறைய, நிறைய மலரத்தொடங்கியுள்ளன. ஆனால் பொருளாதார பின்மை, பத்திரிகை உத்திகளில் தேர்ச்சியின்மை, ஆளும் வர்க்கத்தின் நேரடி மறைமுக எதிர்ப்பு இவை இந்த ஏடுகளின் வாழ்நாளை சுருக்கி விடுகின்றன.

நெஞ்சில் நேர்மையும், நியாய உணர்வும், வணிக நோக்கில்லா தியாகமும் கொண்டு நடத்தப்படும் பல முற்போக்கு இதழ்களை, சகோதர பாசத்துடன் நோக்குகிறோம். எண்ணிக்கையில் குறைந்திருந்தாலும் இவற்றின் வாசகர்கள் எண்ணத்தில் முதிர்ந்தவர்கள் என்பது இவர்களின் பலமாகும்.

செய்திகளைத் தருவதிலும், சார்ந்த கொள்கைகளிலும் மாறுபாடு இருந்தாலும், சமூக பிரக்ஞையும், சமூக நீதிக்காகப் போராடும் உணர்வும் மட்டும் இவை எல்லாவற்றிற்கும் இருக்கிறது என்ற அடிப்படையில் ஒரு கூட்டணியை அமைத்தால் என்ன?


இந்தப் பொது இலட்சியத்தில் முற்போக்கு இதழ்கள் ஒன்று சேருவது பற்றி சிந்தித்தால், பிற்போக்கு சக்திகளின் நச்சு விளைவைச் சரிக்கட்ட முயலலாமே!

நண்பர்கள் இது பற்றிய கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டுகிறோம்.

—சுட்டி ஆசிரியர் குழு

## ●● துணுக்கு மழை ●●

☐ சவூதி அரேபியாவில் உள்ள இந்தியர்கள் தங்கள் குடும்பத்தாருக்குப் பதிவுப் பார்சல் அனுப்பினால்? அந்நாட்டு தபால் நிலையங்கள் ஏற்றுக் கொள்வதில்லை. வேறு நாடுகளுக்கு அனுப்பினாலும் ஏற்றுக் கொள்ளும் சவூதி அரேபியா, இந்தியாவுக்கு மட்டும் ஏற்க மறுப்பதற்குக் கூறும் காரணம்: "இந்தியா பார்சல்களை சரியான முகவரிகளுக்குச் சேர்ப்பதில்லை. திருப்பி அரேபியாவிற்கு அனுப்புவதுமில்லை. இதைப்பற்றி கேட்டால் ஒழுங்கான பதிலும் கொடுப்பதுமில்லை பார்சல் அனுப்புவோர் ஏன் சேரவில்லையென்று கேட்கிறார்கள். எங்கள் அஞ்சல் இலாகாவிற்கு இந்தியாவில் கெட்டபெயர் உண்டாகிறது. வேறு எந்த நாட்டுக்கு அனுப்பினாலும் ஒன்று போய் சேரும், அல்லது திரும்பும் இது போல் இல்லை"




☐ பிரிட்டனில் லேலண்ட் கார் தொழிற்சாலையின் தொழிற்சங்கத் தலைவர்கள் முதலாளிகளும் சேர்ந்து எடுத்த முடிவு தொழிலாளர்களுக்குத் துரோகம் செய்யும் வகையில் அமைந்திருக்கிறது. எனவே தொழிற்சங்கத்திற்கு எதிராகவே தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினர்.

நன்றி: அச்சகத் தொழிலாளி



☐ இவ்வாண்டு நவம்பர் 19 முதல் டிசம்பர் 4 வரை டில்லியில் நடக்கவிருக்கும் 9-வது ஆசிய விளையாட்டுப் போட்டிக்கு இந்திய அரசுக்கு செலவு ரூ 86.5 கோடி. இது பழைய செய்தி. இந்த விளையாட்டை நடத்தும் கமிட்டிக்கு சமீபத்தில் ஓர் ஆடம்பர விருந்து நடந்தது. உறுப்பினர்கள் 80 பேர் கலந்து கொண்டனர். விருந்து செலவு ரூ 1 லட்சம் அதாவது நபருக்கு ரூ 1250 விருந்தில் படைத்த மிக ஆடம்பரமான உணவுகளைக் கண்டு உறுப்பினர்களான எம். பிகளே மலைத்து விட்டனராம்.



FREE E BOOKS - www.thamizham.net / TM1868 / Dec 2010

**ஆக்கம் :** (மாத இதழ்) C. J. ரோஸ், FEAD அலுவலகம், செறுவாரக்கோணம் பாறைசாலை-695 502. தனியிதழ் 50 காசு

**பூஜாமணி :** (தெய்வீக, இலக்கிய, சமூக, கலை மாத இதழ்) அன்பிற்கினியன், அன்பு இல்லம், 19, வன்னியர் [illegible] தெரு, நேதாஜி ரோடு, மதுரை-625 001. ஆண்டு சந்தா ரூ. 12

**சுபம் :** (மாத இதழ்) குன்றில் குமார், 'சுபம்', இருக்கன் துறை, நெல்லை மாவட்டம்-627 106. தனியிதழ் 25 காசு

**குடிசை :** (மாத இதழ்) சமுதாயக் கல்விக்கான கிராமிய இயக்க வெளியீடு ஆசிரியர், ஜேஸ் அலுவலகம், பழைய ஆர். டி. ஓ. கட்டடம், தக்கலை-629 175, வருட சந்தா தபால் மூலம் ரூ. 8/-

**நிழல்கள் :** (மாத இதழ்) A. ராஜேந்திரன், தெற்குத் தெரு, வடசேரி, நாகர்கோவில்-629 001. தனியிதழ் 60 காசு

**செந்நீர் :** (மாதமிரு முறை) தஞ்சை இளஞ்சிங்கம், 343, திருவல்லிக்கேணி, நெடுஞ்சாலை, சென்னை-5. தனியிதழ் 25 காசு

# எமக்கு வந்தவை

**சுத்தி :** (இலவச இதழ்) பிட்னோட்டீஸ் மாகஸின், No. 61-A, பழநியப்பா நகர் மாதவரம், சென்னை-600 060.

**நாம் எங்கே போகிறோம்? :** (தனிச் சுற்றுக்கு மட்டும்) எக்ஸ்பிரஸ் மாகஸினில் நவம்பர் 29, 1981 அன்று வெளியான ரஜினி கோத்தாரி எழுதிய நாம் எங்கே போகிறோம் என்ற கட்டுரையின் தமிழாக்கம். அமைப்பாளர், மதுரை மாவட்டக் கமிட்டி, மக்கள் சிவில் உரிமைக் கழகம் (PUCL) 253, கூடல் நகர், மதுரை-625 018.

**வண்ணங்கள் :** (கவிதைத் தொகுதி) கவிஞர் வண்ணைமூர்த்தி, தனம்மாள் பதிப்பகம், 39, முத்தையாத் தெரு, பழைய வண்ணையம்பதி, சென்னை-21, விலை 50 காசு

**விசாரணைகள் :** (கவிதைத் தொகுதி) நிஜங்கள் வெளியீடு, ஆசிரியர் இனியபாரதி; த. குணசேகரன், 58, அருணாசல நாயக்கன் தெரு, சென்னை-2, விலை ரூ. 6

**உயிர்மெய் :** (கவிதை இதழ்) தனிச்சுற்றுக்கு மட்டும், 6, கீழ் மேல் வீதி, முத்துசாமி காலனி, கொமாரபாளையம் அஞ்சல், கோவை-641 026. விலை 50 காசு

**பாரதியும் பொதுவுடைமையும் :** கா. முகம்மது செரீபு எம். ஏ. அன்னம் (பிர. லிட், சிவன் கோவில் தெரு, சிவகங்கை, விலை ரூ. 7.50

---


அவரே எழுந்து "என்னால இந்த நேரத்துல" கேட்டதும்... "வவுத்த வலிக்குது... வெளிக்கு..." சொல்வதற்குள் டிரைவரைப் பிடித்துக் கொண்டு... தெருக் கோடிக்கு ஓட... "எ[illegible] பார்த்துடா ரொம்ப ஓரத்துல உட்காராதே... முள்ளு கிள்ளு குத்தி தொலைக்கும்.. சும்மா... நடுவிலேயே... நல்ல இடமா பார்த்து உட்காரு"...

ஒரு தரம் வெற்றிலை சீவல் போட்டு குதப்ப ஆரம்பி[illegible]தார்.

த. ராஜசேகரன்—

# உப்பு தேம் ஊருக்குத்தான்...

ஊரின் வடகோடியில்—மேலத்தெருவில் வீடுகள் முடிந்து—வயல் வெளிக்கு செல்லும் பாதையின் இருபுறத்திலும்—எதிரில் ஏதேனும் வண்டி, ஆடு மாடு வந்தால் ஓரமாக ஒதுங்க வேண்டுமென்றால் மனதை சகித்துக் கொள்ள வேண்டும்.



கிராமத்தில் பெரும்பாலும் ஏழைகள் வசிக்கும் பகுதிகளில் இதே நிலைமை தான். பெண்களும்—குழந்தைகளும்—இருட்டிய பின்னரும், விடியற்காலம் வெளிச்சம் படருமுன்னரும்... பாதையின் இருபக்கங்களையும்... கழிப்பிடமாக பயன்படுத்திக் கொள்வது [illegible] சாதாரணம்.

ஊரில் இது எல்லோருக்கும் தெரிந்துத்தான் [illegible]றது. ஆனாலும் இதனை மாற்ற இதுவரை எந்த முயற்சியும் யாரும் எடுத்ததில்லை. சற்று வசதியானவர்கள் கூட இந்த விஷயத்தில் அக்கறையில்லாமல் தான் இருக்கிறார்கள்.

மழைக்காலத்தில் [illegible] ரொம்பவும் மோசமாகிவிடும். வயலுக்கு விடியற்கால[illegible] எழுந்துப்போய்... வெள்ளத்தையெல்லாம்... வடியச் செய்து வீட்டுக்கு திரும்பும் போது... ஊரை நெருங்க... நெருங்க... [illegible]... வெறுங்கால்கள் கூசும். கை தானாகவே மூக்கைப் பொத்துக்கொள்ளும். மருதையா வயலுக்குப் போய் விட்டும்... [illegible] தாமதித்து திரும்புகிறபோது... எதிரே... எருமைமாடு... சேற்று சகதியில் விழுந்து புரண்டு... 'சே என்னடா சனியன் இது' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டார்.

எருமை [illegible]... நெருங்க... சேற்றிலிருந்து தப்ப... பாதையை விட்டு [illegible] வேலியோரமாய் விலக... காலும்... மனமும் ஒரு [illegible] நெருட... அவர் மலத்தை மிதித்து... ஓட்டமும் நடையுமாய் போய்... வாய்க்காலில் காலைத் தேய்த்து கழுவிய பின்னரும் அவர் சமாதானம் அடைய[illegible]லை.

தெருவுக்குள் நுழையும் போதே உரத்த [illegible]வில் "சோத்துல உப்பு போட்டு திங்கறாங்களா.. இல்லே வேற [illegible]சம் போட்டு திங்கறாங்களா... தடிச்சிங்க... பாதையில் ஒ[illegible] மனுஷன் நடக்க இருக்கா... இதை கேக்க நாதி இல்லேப[illegible]ய்விட்டு பொத்தாம் பொதுவில் கூப்பாடு போட்டு [illegible]தார்.

இரவு புழுக்கத்தில் தூக்கம் [illegible]மல் திண்ணையில் புரண்டுகொண்டிருந்தார். பக்கத்தில் படுத்திருந்த பேரன் [illegible]சாமத்தில் எழுந்து... "யம்மா யம்மா" இரண்டுதரம் கூப்பிட்டு[illegible]பின் சிணுங்கினான். மருதையா பொறுத்துப் பார்த்தார். யா[illegible] எழுந்து ஏனென்று கேட்பதாக தெரியவில்லை.

←

FREE E BOOKS - www.thamizham.net / TM1868 / Dec 2010

# SAKTHI SUGARS LIMITED

**Pace Setters for Rural Prosperity :**


- ☐ Relentless efforts are taken to harvest sunlight energy which is available in plenty through sugarcane crop and to convert them into other forms of energy viz: sugar and alcohol for the economic well being of the millions.

- ☐ Creative measures taken to educate the farmers to adopt innovative technology for cultivation of sugarcane have resulted in improvement of yield to 45 tonnes from 28 tonnes enabling the farmers to earn an additional income of about Rs. 3,000 per acre.

- ☐ Distribution of more than Rupees Ten crores as sugarcane price annually to about ten thousand sugarcane farmers, a bulk of whom are marginal and small farmers generates rural employment to over twenty thousand families in the agricultural sector while stimulating additional employment to about twenty thousand families in the tertiary sector.

| Registered Office | Factory |
|---|---|
| 73-A, Race Course Road, | Sakthinagar-638 315. |
| Coimbatore-641 018. | Periyar District. |
| Phone: 25551 - 5, | Phone: 41,42,43 & 44 |
| Telex: 0855 - 333. | (Sakthinagar) |


## ...க்கும் தட்டுகளும் புலன் கடந்த ஆய்வும்



இந்த விரிந்த பிரபஞ்சத்தில் 1,00,000 மில்லியன் விண்மீன்கள் உள்ளன. அவற்றில் ஒரு விண்மீனே நமது சூரியன். இந்தச் சூரியனைச் சுற்றும் கிரகங்களில் ஒன்று நமது பூமி. பிற விண்மீன்களைச் சார்ந்த கிரகங்களில் நம்மைப்போல அல்லது நம்மைவிட, குறைந்த பட்சம் விஞ்ஞான ரீதியாக உயர்ந்த, ஜீவிகள் வசிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது பகுத்தறிவுக்குப் பொருத்தமானதாகும்.

பறக்கும் தட்டுக்கள், வேறு கிரகத்து ஜீவிகளின் வாகனங்களாக ஏன் இருக்கக்கூடாது?

பறக்கும் தட்டுக்கள் மனித நாகரிகம் தவழ ஆரம்பித்த காலங்களிலிருந்தே பூமிக்கு வந்து போனதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன பறக்கும் தட்டுகள் பற்றிய ஆய்வை அமெரிக்க, சோவியத் விஞ்ஞானிகள் அரசாங்க அளவில் நிகழ்த்தி வருகிறார்கள்.

பல ஒளி ஆண்டுகள் தொலைவிலிருந்து (1 ஒளி ஆண்டு 9,460,000 மில்லியன் கி. மீ. தூரம்) எப்படி, பறக்கும் தட்டுக்கள் நம் பூமிக்கு வர முடியும்? சாஸ்திரிக பௌதீகத்தின் ஞானத்திற்கு அப்பால், நவீன பௌதிகம் சில ஆச்சர்யகரமான கருத்துக்களை முன் வைக்கிறது.


நமது பிரபஞ்சம் முப்பரிமாணமுள்ள (நீளம், அகலம், உயரம் ஜடப் பொருள் என்றே இதுவரை நம்பியிருந்தோம். ஆனால், இதற்கு நான்காவது பரிமாணமும் உள்ளது. அது தான் காலம் என்றார் ஐன்ஸ்டன். தற்போது விஞ்ஞானிகள் இதற்கு மேலும் ஒருபடி சென்று இந்த 4 பரிமாணங்கள் தவிர மேலும் பல பரிமாணங்கள் இந்த பிரபஞ்சத்தில் இருக்கலாம் என்கின்றனர். எனவே குறுக்கு வழியில் இந்த வேறு உயர்ந்த பரிமாணங்கள் வழியாக பறக்கும் தட்டுகள் நமது முப்பரிமாண உலகிற்கு வரக்கூடும் என்பது பற்றிய ஆய்வை பேராசிரியர் செய்கல் மேற்கொண்டு வருகிறார். (படம்)



மேலும் இந்த உயர்ந்த பரிமாணங்களில் நமது பிரக்ஞை சஞ்சரிக்கலாம், அப்போது நாம் அப்பரிமாணங்களில் உள்ளவர்களோடு எளிதில் தொடர்பு கொள்ளலாம்

பறக்கும் தட்டுகள் பற்றிய பல புதிர்களை புலன்கடந்த உளவியலே ...க்க முடியும் என முற்போக்கு விஞ்ஞானிகள் நம்புகின்றனர். —ரமேஷ்

FREE E BOOKS - www.thamizham.net / TM1868 / Dec 2010




FREE E BOOKS - www.thamizham.net / TM1868 / Dec 2010

[illegible] 15, [illegible] 1982 Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment Licence No: TN/MS(N)WPP-58

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழம்
1868/dec2010

*With best compliments from :*

★
★★★
★

# Hirusha Printers

**Fine Art Colour Printers & Book Binders**

35, Lubbai Street,
Pudupet, : : Madras-2

**Phone : 810273**

[illegible]

FREE E-BOOKS - www.thamizham.net / TM1868 / Dec 2010